36

# முஸ்லிம் மாதர் மறைப்பும் திறப்பும்

மூலம்:


சங்கைக்குரிய பெரியார் அப்துல் அஸீஸ்
இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ்
இஸ்லாமியக் கல்வி ஆராய்ச்சி, மார்க்கத் தீர்ப்பு,
அழைப்பு, பிரசார ஸ்தாபனத் தலைவர்.


தமிழாக்கம்:


மௌலவி எஸ். யூசுப் லெப்பை (கபூரி)
நற்பிட்டி முனை, கல்முனை.



அச்சிட்டு வெளியிடுவோர்:-
தலைமைப் பணியகம்,
இஸ்லாமிய கல்வி ஆராய்ச்சி, மார்க்கத்
தீர்ப்பு, அழைப்பு, பிரசார ஸ்தாபனம்.
ரியாத் — சவூதி அரேபியா.


அல்லாஹ்வுக்காக வக்பு செய்யப்பட்டது.


1403 H. — 1983

DHARUTH THOWHEED ARABIC COLLEGE
PARAGAHADENIYA
KU/WEUDA.

36

# முஸ்லிம் மாதர் மறைப்பும் திறப்பும்

மூலம்:

**சங்கைக்குரிய பெரியார் அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ்**

*இஸ்லாமியக் கல்வி ஆராய்ச்சி, மார்க்கத் தீர்ப்பு, அழைப்பு, பிரசார ஸ்தாபனத் தலைவர்.*

தமிழாக்கம்:

**மௌலவி எஸ். யூசுப் லெப்பை (கபூரி)**

*நற்பிட்டி முனை, கல்முனை.*

*அச்சிட்டு வெளியிடுவோர்:-*
*தலைமைப் பணியகம்,*
*இஸ்லாமிய கல்வி ஆராய்ச்சி, மார்க்கத் தீர்ப்பு, அழைப்பு, பிரசார ஸ்தாபனம்.*
*ரியாத் — சவூதி அரேபியா.*

**அல்லாஹ்வுக்காக வக்பு செய்யப்பட்டது.**

**1403 H. — 1983**

بسم الله الرحمن الرحيم

அப்துல் அஸீஸ் இப்னு அப்தில்லாஹ் இப்னு பாஸ் அவர்களில் நின்றும், முஸ்லிம்களில் இதனைக் கண்ணுறுவோர்பால் அல்லாஹ்வின் சாந்தியும், அருளும், பாக்கியமும் உண்டாவதாக. அல்லாஹ் என்னையும் அவர்களையும் துக்கமும், அவமானமுமுண்டாக்கும் காரணங்களிலிருந்து காப்பாற்றுவானாக! ஆமீன்.

முஸ்லிம்களே! 'பெண்கள் அந்நிய ஆடவருக்கு அழகையும், அலங்காரத்தையும் வெளிப்படுத்துவது ஹறாம்' என்ற அல்லாஹ்வின் கட்டளையை அலட்சியஞ் செய்துவிட்டுப் பெரும்பாலான பெண்கள் ஆண்களிலிருந்து மறைந்து கொள்ளாமலும், வதன எழிலை வெளிப்படுத்தியும் கூச்சமின்றி நடமாடித்திரியும் கேவல நிலை அநேக ஊர்களிலே பரவி வருவது உங்கள் பார்வையிலிருந்து மறைந்த விஷயமல்ல.

இவை மிகமோசமான வெறுப்பூட்டும் நிகழ்ச்சி என்பதிலும், அப்பட்டமான குற்றச் செயல் என்பதிலும் சிறிதும் சந்தேகமில்லை. வெளியில் நடமாடுவதும், அழகை வெளிப்படுத்துவதுமான இத்தீய செயல், படிப்படியாக வளர்ந்து கெடுதிகளை வெளிப்படுத்தி, குற்றங்களைத் தோற்றுவித்து, நாணத்தைப் போக்கிப் பிரச்சினைகள் பரவ ஏதுவாயிருப்பதோடு இறை தண்டனையும் சாபக்கேடும் இறங்குவதற்குப் பெருங்காரணமாயமைந்திருக்கின்றது.

எனவே முஸ்லிம்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்களிடையேயுள்ள அறிவீனரின் கரங்களைப் பற்றிப் பாவங்களில் தோய்ந்து விடாது, தடுத்து நிறுத்துங்கள். உங்கள் பெண்மணிகளை அல்லாஹ் விரோதித்தவைகளிலிருந்து தடுத்து வையுங்கள். பர்தாவும், திரையும் போட்டுக்கொள்ளுமாறு அன்னாரை வலியுறுத்துங்கள். பரிசுத்த இறைவனின் கோபத்திற்கும், தண்டனைக்கும் அஞ்சுங்கள். 'நிச்சயமாக மனிதர்கள் வெறுப்புக்குரியவற்றைக் கண்ணுற்றும் அதனை அவர்கள் வெறுத்துத் தடுக்க வில்லையானல், அல்லாஹ் அவனது தண்டனையைக் கொண்டு அவர்களை அழித்து விடுவான்' என நபி (ஸல்) நவின்றார்கள்.

அல்லாஹ் அவனது சங்கை வாய்ந்த வேத நூலிலே ''இஸ்ராயீலின் சந்ததிகளில் எவர்கள் நிராகரித்தார்களோ அவர்கள் (நபி) தாவூது (அலை), (நபி) ஈஸா இப்னு மர்யம் (அலை) அவர்கள் நாவாலும் சபிக்கப்பட்டேயிருக்கின்றனர். ஏனென்றால், அவர்கள் (அக்காலத்திலும்) வரம்பு கடந்தும், பாவம் செய்தும் வந்தனர். (அன்றி) அவர்கள் செய்து வந்த எந்த விலக்கப்பட்ட காரியத்தையும் ஒருவருக்கொருவர் தடை செய்யவுமில்லை. அவர்கள் செய்துகொண்டிருந்தவையும் நிச்சயமாக மிகத் தீயவை'' (5:78-79) என்று கூறியுள்ளான்.

முஸ்னதிலும், மற்றும் வேறு கிரந்தங்களிலும் இப்னு மஸ்ஊது (றலி) அவர்கள் வாயிலாகக் கூறப்பட்டுள்ளதாவது: நபி (ஸல்) இந்த ஆயத்தை ஓதிக் காட்டிவிட்டுச் சொன்னார்கள்: ''எனது ஆன்மா யார்

வசமிருக்கிறதோ, அவன்மீது ஆணையாக, நன்மையான காரியங்களை நீங்கள் மற்றவர்களுக்கு ஏவவேண்டும். தீயனவற்றைத்தடுக்கவேண்டும். குறைமதியாளர் கரங்களைப் பிடித்து நேர்வழியின் பால் அவர்களைத் திருப்பிவிட வேண்டும். சத்திய வழியைச் சிறப்பாக கடைபிடித் தொழுக வேண்டும். இன்றேல் உங்களில் சிலரின் உள்ளங்களைக் கொண்டு சிலருக்கு அடி கொடுக்க வேண்டிய நிலைவரும். பின்னர் (இஸ்ராயீலின் சந்ததிகளான) அவர்களைச் சபித்ததுபோன்று அல்லாஹ் உங்களையும் சபிப்பான்''. மற்றொரு ஹதீஸில், ''உங்களில் எவராவது வெறுப்பூட்டும் செயலைக் கண்ணுற்றால், தனது கரத்தினால் அதனைத்தடுத்து விடட்டும். அங்ஙனம் செய்ய இயலாது போனால், நாவினால் தடுக்கட்டும். இல்லாவிட்டால் உள்ளத்தால் அதை வெறுத்து விடவேண்டும். இதுவே மிகப் பலவீனமான ஈமான்'' என்று நபி (ஸல்) விளக்கிக் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ் ஸுப்ஹானஹூவதஆலா சங்கை வாய்ந்த அவனது வேத நூலில் பெண்கள் திரையிட்டுக் கொள்ள வேண்டுமென்றும், இல்லங்களில் தரித்திருக்க வேண்டுமென்றும், வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டுமென்றும், விரும்பத்தகாதன நிகழாது காத்துக் கொள்ளவும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் காரணங்களைத் தவிர்க்கவும் ஆடவரின் சொல்லுக்குப் பணிந்து நடக்கவேண்டுமென்றும் ஆக்ஞாபித்துள்ளான். அல்லாஹ் கூறுவதாவது:- 'நபியுடைய மனைவிகளே! நீங்கள் மற்றச் சாதாரணப் பெண்களைப் போன்றவர்களல்லர். நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயப்பட்டவர்களாயின் (அந்நியருடன் பேசுஞ்

சமயத்தில்) நளினமாகப் பேசாதீர்கள். மோகநோய் பீடித்த இதயமுள்ளவன் தவ்றுன விருப்பம் கொள்ளக் கூடும். எனவே நீங்கள் (எதைப் பேசியபோதிலும்) நேர்மையாகப் பேசிவிடுங்கள்'. *(33: 32)*

"(நபியுடைய மனைவிகளே!) நீங்கள் உங்கள் இல் லங்களிலே தரித்திருங்கள். மௌட்டீகக் கால மாதர் (தங்களை அலங்கரித்துக் கொண்டு) வெளியில் நடமா டியது போல் நீங்களும் வெளியே நடமாடாதீர்கள். தொழுகையை (க்கிரமமாகச் செவ்வனே) நிறைவேற் றுங்கள். ஏழைவரியை ஈயுங்கள். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முற்றிலும் வழிப்பட்டொழு குங்கள்." *(33: 33)*

பரிசுத்த இறைவன் இவ்வேத வாக்கியங்கள் மூலம் விசுவாசிகளின் அன்னையர்களான, சங்கைக்குரிய நபி யின் மனைவியருக்கு விலக்கல் கட்டளை பிறப்பித்துள் ளான். அவர்களோ மாதர் குலத்தில் மகா சிரேட்ட மானவர்கள். ஆண்களின் பசப்பு வார்த்தைகளுக்குப் பணிந்துவிடாத பரிசுத்த பத்தினிகள். மோக நோய் பிடித்த இதயத்தவர் இச்சை கொள்ளா வண்ணம் நேர்மையாகவும், தீர்க்கமாகவும் உரையாடுபவர்கள். அவர்களையே, வீடே இராச்சியமெனப் பற்றி வாழு மாறு கட்டளை பிறப்பித்துள்ளான். மௌட்டீகக் கால நடமாட்டத்தைத் தடை செய்துள்ளான். அதாவது:- முகம், கழுத்து, மார்பு, முன்கை, கெண்டைக் கால் ஆதியாம் கவர்ச்சியான உறுப்புக்களின் அழகை யும், எழிலையும் வெளிப்படுத்துவதால் சச்சரவுகளும், மகாமோசமான பிரச்சினைகளும், விபச்சார உணர்ச்

சியைத்தூண்டும் வண்ணம் ஆடவர் அகங்களை ஆகர்ஷித்தலும் விளையுமென்பதினாலேயே இங்ஙனம் தடை செய்யப்பட்டுள்ளது.

அல்லாஹ் ஸுப்ஹானஹுவதஆலா விசுவாசிகளின் அன்னையருக்கு - அவர்களுமோ சீர்திருந்தியவர்களாக, சுத்த விசுவாசிகளாக, பரிசுத்த கற்புக்கரசிகளாக இருக்கும் போதே, இத்தகைய வெறுக்கத்தக்க காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இறைவன் கட்டளையிடுவதனால், மற்றச் சாதாரண பெண்மணிகள் தவிர்த்துக் கொள்வதும் வெறுப்பதும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் காரணங்களுக்கு அஞ்சுவதும் அவசியத்திலும் அவசியம் என்பதைக் கூறவும் வேண்டுமா?

மானஈனப் பிரச்சினைகளிலிருந்து எங்களையும் உங்களையும் அல்லாஹ் பாதுகாப்பானாக!

இந்த வேதவாக்கிலே, கூறப்படும், ''தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏழைவரியை ஈயுங்கள். அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் வழிப்பட்டு நடவுங்கள்'' என்ற சட்டம் நபியின் மனைவியருக்குமட்டுமன்றி மற்றும் ஏனைய பெண்டிருக்கும் பொதுவானவிதி என்பது அறியப்படுகிறது.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:- ''(நபியின் மனைவிகளாகிய) அவர்களிடம் ஏதாவது பொருளைக் கேட்க நீங்கள் விரும்பினால் திரைக்குப் பின்னாலிருந்து அவர்களிடம் கேளுங்கள். இங்ஙனம் செய்வது அவர்

கள் உள்ளங்களையும், உங்கள் உள்ளங்களையும் தூய்மையாக்கும்.'' இச்சங்கைக்குரிய வேத வாக்கானது, ஆண்களை விட்டும் பெண்கள் மறைந்து கொள்வதும், திரையிட்டுக் கொள்வதும் அவசியம் என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளது. அன்றியும் இவ்வாயத்தில் பெண்கள் பர்தா அணிவது ஆண் பெண் இருபாலாரதும் இதயங்களைத் தூய்மைப்படுத்தும் என்றும், விரும்பத்தகாத தீயகாரியங்களையும், அவற்றின் காரணங்களையும் அகற்றிவிடுமென்றும் இறைவன் விளக்கிக்காட்டியுள்ளான். அன்றியும் வதன எழிலை வெளிக்காட்டுவதும் திரைமறைவின்றி இருத்தலும், அருவருப்பானதும் அசிங்கமானதும் என்றும், நிச்சயமாகத் திரைமறைவு சாந்தியும், தூய்மையுந்தரும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளான்.

முஸ்லிம் பெருங்குடி மக்களே! அல்லாஹ் போதிக்கும் ஒழுக்க சீலங்களை ஒழுங்காகக் கடைப்பிடித்தொழுகி வாருங்கள். அல்லாஹ்வின் ஆக்ஞைப்படி ஒழுகி உதாரணப் புருஷர்களாக விளங்குங்கள். சாந்திக்கும், விமோசனத்திற்கும், கற்புடமைக்கும் காரணமாக விளங்கும் (பர்தா) திரையிடுதலை ஒழுங்காகக் கடைப்பிடிக்குமாறு உங்கள் பெண்மணிகளை வலியுறுத்துங்கள்.

சிறப்பும் மேன்மையும் தங்கிய அல்லாஹ் கூறியுள்ளான்:- ''நபியே! உம்முடைய மனைவிகளுக்கும், உம்முடைய பெண் மக்களுக்கும், விசுவாசிகளின் பெண்களுக்கும் அவர்கள் தங்கள் தலை முந்தானைகளை (த் தங்கள் முகங்களிலிருந்து) இறக்கிக்கொள்

ளும்படி நீர் கூறுவீராக. அதனுல் அவர்கள் (கண்ணியமானவர்கள் என) அறியப்பட்டு, எவருடைய துன்பத்திற்கும் அவர்கள் உள்ளாகாதிருப்பதற்கு இது மிக சுலபமா(ன வழியா)கும். அல்லாஹ் மிக்க மன்னிப்போனும் கிருபை செய்வோனுமாக இருக்கின்ருன்." (33: 59). முந்தானை (ஜில்பாப்) என்பது, ஒரு பெண் தனது அழகையும், அலங்காரத்தையும் மறைத்துக்கொள்வதற்காகத் தலைமீது போட்டுக்கொள்ளும் துணி. விசுவாசிகளின் பெண்கள் அனைவரும், அன்னுர் கற்பைக் காத்துக்கொள்ளும் வண்ணம் கேசம், வதனம், மற்றும் கவர்ச்சியான பாகங்களின் எழிலை மறைப்பான் வேண்டி அவர்கள் முந்தானையை முகத்தில் தொங்கவிட்டுக்கொள்ளும் படி அல்லாஹ் ஏவியுள்ளான். இவ்வாறு அவர்கள் அனுசரித்து நடந்து கொள்ளின், அவர்கள் பரிசுத்தமானவர்கள் என அறியப்படுவார்கள். அம்மாதரின் தூய்மையும் பாதுகாக்கப்படும். இதனை அனுசரிக்காவிட்டால், அவர்கள் சொல்லொணுத் துன்பத்துக்காளாவர்.

அலி இப்னு அபீதல்ஹா (றலி) அவர்கள் இப்னு அப்பாஸ் (றலி) வாயிலாக மேற்குறிப்பிட்ட ஆயத்தை விளக்கிக் கூறும்போது, "விசுவாசிகளான பெண்கள் அவசியத் தேவை காரணமாக அன்னுர் இல்லங்களிலிருந்து வெளியே செல்ல நேரிட்டால், அவர்கள் தலையின் மேற்பாகத்திலிருந்து தொங்கும் முந்தானையால் முகங்களை மூடிக்கொள்ள வேண்டும்; வழியைத் தெரிந்து கொள்வதற்காக ஒரு கண்ணை மட்டும் திறந்துவிடலாம்" என அல்லாஹ் கட்டளையிட்டுள்ளதாகக் கூறினுர்கள்.

முஹம்மதிப்னு சீரின் சொன்னார்கள்:- உபைதத்துஸ் ஸல்மானியிடம், "முந்தானையை அவர்களின் முகங்களின் மீது தொங்க விட்டுக்கொள்வது" சம்பந்தமாகக் கூறப்பட்டுள்ள இறைவசனத்தின் விளக்கம் பற்றிக் கேட்டபோது, "தலையையும், முகத்தையும் மூடி மறைப்பது, இடது கண்ணை மட்டும் திறந்து விடுவது" என்று விளக்கம் தந்தார்கள்.

இவ்வாயத்தின் இறுதியில் "அல்லாஹ் மன்னிப்போன்; கிருபையாளன்" என்று அறிவிப்பதானது, இது பற்றிய எச்சரிக்கையும், தடை விதிப்பும் வருவதற்கு முன்னர் நிகழ்ந்த குறைபாடுகளை அல்லாஹ் அவனது கிருபாகடாட்சத்தினால் மன்னித்துவிட்டான் என்பதேயாம்.

மற்றொரு வேதவாக்கில் அல்லாஹ் கூறுவதாவது:– "விவாக விருப்பற்ற முதிர்ந்த வயதுடைய (நடமாட முடியாது உட்கார்ந்தே இருக்கக்கூடிய) கிழவிகள், தங்கள் அழகைக் காண்பிக்கவேண்டுமென்ற நோக்கமின்றித் தங்கள் மேலாடைகளைக் களைந்து விட்டிருப்பது அவர்கள்மீது குற்றமில்லை. இதனையும் அவர்கள் தவிர்த்துக்கொள்வதே அவர்களுக்கு மிக்க நன்று. அல்லாஹ் யாவையும் செவியுறுவோனும், யாவும் அறிந்தோனுமாவான்". (24:60)

விவாகஞ் செய்ய வேண்டுமென்ற விருப்பமற்ற கிழவிகள் அவர்கள் முகம், கைகளிலுள்ள ஆடைகளை அகற்றிவிட்டிருப்பது அன்னார்மீது குற்றமாகாது. ஆனாலும் ஆடை ஆபரணாதிகளின் அலங்காரத்தை வெளிப்

படுத்தும் நோக்கமில்லாதிருக்க வேண்டுமென்று இவ் வாயத்தில் அறிவித்துள்ளான். எனவே இவ்வாயத் தின்மூலம் அறியக்கிடைப்பது என்னவெனில், அலங் காரத்தை வெளிப்படுத்தும் நோக்கத்துக்காக அவளது முகம், கரம், மற்றும் கவர்ச்சி உறுப்புக்களிலிருந்தும் ஆடையை அகற்றுவது அவளுக்கு ஆகுமானதல்ல. மிகவும் வயது முதிர்ந்த கிழவியானாலும் இந்நோக் கத்திற்காக ஆடையை அகற்றினால் அவள்மீது குற் றமேயாகும். ஏனெனில் கூறப்படும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கருத்துண்டு. ஏனெனில், அலங்காரக் கவர்ச்சியை வெளிப்படுத்தினால் வெளிப்படுத்துபவள் கிழவியானாலும் பேராபத்து விளையவே செய்யும். கிழ வியரின் நிலையே இப்படியானால், பருவக் கன்னியர், அழகு வனிதையர் நிலை எவ்வாறிருக்குமெனக் கூறவும் வேண்டுமா? இம்மாதர் வெளியில் நடமாடினால் அவர் களுக்கு ஏற்படும் விளைவு மிகப் பாரதூரமானதாகவே இருக்கும். அவர்களின் குற்றம் மகா பெரியதாகவும் அவர்கள் மீதுள்ள பாவம் மிக்க வன்மையானதாயு மிருக்கு மென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

கிழவியர் விடயத்தில், அன்னார் விவாக விருப்பற்ற வர்களாயிருக்கவேண்டுமென்று அல்லாஹ் நிபந்தனை யிட்டிருக்கிறான். ஏனிந்த நிபந்தனை? அல்லாஹ்வே இதனை நன்கறிந்தவன். அறிந்துகொள்ளுங்கள்; விவாக விருப்பானது, அவள் அடையப்போகும் கண வன்மீது கொண்டுள்ள இச்சையினால் உந்தப்பட்டுத் தன்னை அழகுபடுத்தவும், அலங்காரத்தை வெளிப் படுத்தவும் தூண்டும். இதனாற்றான் அவளையும், பிற ரையும் பேராபத்துப் பிரச்சினைகளில் சிக்கவைக்காமல்

தற்காத்துக் கொள்வதற்காக அழகை மறைக்கும் ஆடையை அகற்றுவதைத் தடை செய்துள்ளான்.

இறுதியாக வயது முதிர்ந்த கிழவிகளும் பூணிப் புடன் நடந்து கொள்ளுமாறு தூண்டி இவ்வாயத்தை இறைவன் பூரணப்படுத்தியுள்ளான். இதுவே அன் னுருக்கு ஏற்றமானது எனவும் இயம்பியுள்ளான். இதற்கொப்ப அன்னுர் அழகினை வெளிப்படுத்தாது ஆடையால் மறைப்பதன் சிறப்பும், நன்மையும் தென்படும் என்றும் வெளிப்படுத்தியுள்ளான்.

எனவே முன்னர் கூறிய பிரகாரம் பருவக்கன்னி யர், அழகையும் அலங்காரத்தையும் வெளிப்படுத்தாத முறையில் பூணிப்புடன் திரையிட்டுக் கற்பைக் காத்துக் கொள்வதும், பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் கார ணங்களைக் களைந்து விடுவதும் கட்டாயமாகும்.

அல்லாஹ் கூறுகின்ருன்:-"நபியே! விசுவாசிகளான ஆண்களுக்கு அவர்கள் பார்வைகளைக் கீழ்நோக்கித் தாழ்த்திக் கொள்ளுமாறும், கற்பைப் பாதுகாக்குமா றும் கூறுவீராக! இது அவர்களுக்குப் பரிசுத்தமளிக் கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வன வற்றை நன்கறிந்தவனுயிருக்கிருன்." (24-30)

'(நபியே!) விசுவாசிகளான பெண்களுக்கும் நீர் கூறும்:- அவர்களும் தங்கள் பார்வையை கீழ் நோக்கியே வைத்து, தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். (அன்றி தங்கள் தேகத்தில் பெரும்பா லும்) வெளியில் தெரியக்கூடியவைகளைத் தவிர, தங்

கள் அழகையும் (ஆடை, ஆபரணம் போன்ற) அலங்காரத்தையும் வெளிக்காட்டாது மறைத்துக் கொள்ளவும். தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக்கொள்ளவும்.

பெண்கள் தங்களுடைய கணவர்கள், தங்களுடைய தந்தைகள், தங்களுடைய கணவர்களின் தந்தைகள், தங்களுடைய குமாரர்கள், தங்களுடைய கணவர்களின் குமாரர்கள், தங்களுடைய சகோதரர்கள், தங்களுடைய சகோதரர்களின் குமாரர்கள், தங்களுடைய சகோதரிகளின் குமாரர்கள், அல்லது (முஸ்லிமாகிய) தங்களு(டன் தொடர்பு)டைய பெண்கள், தங்களுடைய வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது பெண்களின் விருப்பமற்றுத் தங்களை அண்டி ஜீவிக்கும் ஆண்கள், பெண்களின் மறைவான அவயவங்களை அறிந்துகொள்ளாத சிறுபிராயத்தையுடைய (ஆண்) குழந்தைகள் ஆகிய இவர்களைத் தவிர (மற்றெவருக்கும் தாங்கள் அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்கள் போன்ற) தங்களுடைய அலங்காரத்தையும் அழகையும் காட்ட வேண்டாம். அன்றி தங்களுடைய அலங்காரத்தில் மறைந்திருப்பதை அறிவிக்க, (பூமியில்) தங்களுடைய கால்களைத் தட்டித் தட்டி நடக்கவேண்டாம்.

விசுவாசிகளே! (இதில் ஏதும் உங்களில் தவறு ஏற்பட்டுவிட்டால்) நீங்கள் அனைவரும் சித்தி பெறும் பொருட்டு, அல்லாஹ்வின் பக்கமே பாப மன்னிப்புக் கோரி (உங்களின் மனதை)த் திருப்புங்கள்.''

**(24: 31 - 32)**

பரிசுத்தனுன அல்லாஹ் சங்கைவாய்ந்த இவ்விரு வேத வாக்கியங்கள் மூலம் விசுவாசிகளான ஆண், பெண் இருபாலரும் பார்வையைத்தாழ்த்திக் கொள்ள வேண்டுமென்றும், மர்மஸ்தானங்களைப் பேணிக் கொள்ள வேண்டுமென்றும் ஆக்ஞாபித்துள்ளான்: விபச்சாரத்தின் விளைவு மகாமோசமானது என்பதை எடுத்துக்காட்டவே, இங்ஙனம் இயம்பியிருக்கிருன்: இதனுல் முஸ்லிம்களுக்கிடையில் பல கலவரங்கள் தோன்றிச் சமூகப்பிணைப்புப் பாதிக்கப்படுவதற்கு ஏது வாகிவிடும். பார்வை அதன் போக்கில் விடப்பட்டால், உள்ளங்கள் காம விகாரநோயினுல் பாதிக்கப்பட்டுப் பல கெடுதிகளும் பிரச்சினைகளும் தோன்றுவதற்கு ஏதுவாகிவிடும். பார்வையைத் தாழ்த்துவது சாந்திக்கு வழிவகுக்கும். இதனுலன்ருே இறைவன் பார்வையைத் தாழ்த்தவும், மர்மஸ்தானங்களைப் பேணவும் கட்டளை யிடும் திருவாக்கியங்களை அருளியுள்ளான். இவ்விரண் டையும் பூணிப்புடன் அனுசரித்துவரின், இம்மை மறுமை இரண்டிலும் தூய்மையும் விமோசனமும் கிடைத்துவிடும். இவ்விரு உறுப்புக்களும் அவற்றின் போக்கில் விடப்படுமானுல் இம்மை மறுமை இரண்டி லும் வேதனைக்குரிய தண்டனையும் சாபக்கேடும் கிடைப் பதற்கு இடமாகிவிடும்.

இதிலிருந்து விமோசனமளிக்குமாறு இறைவனை இறைஞ்சுவோமாக!

கண்ணியமும், மேன்மையுமுள்ள இறைவனுடைய, 'மனிதர் செய்வனவற்றை அல்லாஹ் நன்கு அறிகி ருன்; அவனிடம் எந்த இரகசியமும் மறைந்துவிடாது'

என்ற கூற்றிலிருந்து, அவன் ஹறுமாக்கியவற்றைச் செய்வோருக்குரிய தண்டனை பற்றியும் எச்சரிக்கை செய்வது புலனுகின்றது. அன்றியும் மனிதன் புரியும் நற்கிரிகைகளையும் துர்க்கிரிகைகளையும் அறிந்தவனுகவும், பார்த்தவனுகவுமிருக்கின்ருன் என்பதைப் பின்னல் வரும் திருவசனத்தின் மூலம் சிந்திக்க வைத்துள்ளான். அவன் கூறுவதாவது:- "(மனிதர்களின்) கண்கள் செய்யும் சூதுகளையும் உள்ளங்களில் மறைந்திருப்பவைகளையும் அவன் நன்கறிவான்." *(40: 19)*

"நீங்கள் என்ன நிலைமையிலிருந்த போதிலும், குர்ஆனிலிருந்து எ(ந்த வசனத்)தை ஓதிய போதிலும், (உங்களுடைய காரியங்களில்) நீங்கள் எதைச் செய்த போதிலும் நீங்கள் அவற்றில் ஈடுபட்டிருக்கும்போதே உங்களை நாம் கவனிக்காமலில்லை." *(10: 61)*

எனவே ஓர் அடியான் தனது இரட்சகனை அஞ்சுவதும், அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போது பாவச் செயல்புரிய வெட்கப்படுவதும், அவன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவன் விடுத்த கடமையான காரியங்களைச் செய்யாமலிருப்பதற்கு வெட்கப்படுவதும் அத்தியாவசியமாகும்.

விசுவாசிகளான ஆண்களுக்கு ஏவிய பிரகாரம் பெண்களும் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், மர்மஸ்தானங்களைப் பேணிக் கொள்ளுமாறும் கட்டளையிட்டுள்ளான். இக்கூற்றின் மூலம் அநாவசியமான பிரச்சினைகள் தோன்றுவதற்குரிய காரணங்களைவிட்டும் காத்துக்கொள்ளவும், சாந்தி நிலவவும், கற்புடைமை

பாதுகாக்கப்படுவதற்குரிய காரணங்களைக் கடைபிடிக்கத் தூண்டவும் செய்துள்ளான்.

இதனை அடுத்து ''வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட பாகங்களைத் தவிர்த்து, அவர்கள் அலங்காரங்களை வெளிப்படுத்தவேண்டாமென விலக்கியுள்ளான்'' என்ற இக்கூற்றில் ''வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டவை'' என்ற வாக்கியத்துக்கு, ''ஆடை அணிகளிலிருந்து வெளிப்படும் பகுதிகள் என்றும் இப்பாகங்களை வெளிப்படுத்துவது மன்னிக்கப்பட்டுள்ளது'' என்றும் இப்னு மஸ்ஊது (றலி) விளக்கந்தந்துள்ளார்கள். அவர்கள் கருத்தென்னவெனில், வெளியில் தென்படும் உறுப்பினைக் கண்ணுற்றவர் கூச்சமடையவோ, இதனால் ஆபத்து விளையவோ மாட்டாது என்று கருதப்படும் வண்ணம் உடுத்தும் ஆடை என்பதேயாம்.

இப்னு அப்பாஸ் (றலி) அவர்கள், ''வெளியில் தெரியும் பகுதி'' என்பது, முகத்தையும் இரு மணிக்கட்டுகளையும் குறிக்குமென்றும், இது 'பர்தாவு' டைய ஆயத்து அருளப்படுவதற்கு முன்னருள்ள பெண்களின் நிலையை எடுத்துக் காட்டுகிறது என்றும், அதன்பின் 'அஹ்ஷாப்' என்ற அத்தியாயத்திலும் வேறு அத்தியாயங்களிலும் முன்னர் கூறிய சங்கைக்குரிய ஆயத்துக்களின்படி முழு உடம்பையும் மறைத்தல் பெண்களுக்குக் கட்டாயக் கடமை (வாஜிபு) என்றும் வியாக்கியானஞ் செய்துள்ளார்கள்.

அலீ இப்னு அபீதல்ஹா (றலி) அவர்களின் கூற்றென்று இப்னு அப்பாஸ் அவர்களின் வியாக்கியானத்

துக்கு ஆதாரமாயமைந்துள்ளது. அவர்கள் கூறுவதாவது:- ''விசுவாசிகளின் பெண்கள் ஏதாவது தேவையை முன்னிட்டு அவர்கள் இல்லங்களிலிருந்து வெளியே செல்லப்புறப்பட்டால், அவர்கள் முந்தானையால் தலைப் பாகத்திலிருந்து முகங்களை மூடிக் கொள்ளவும். இரு கண்களை மட்டுந்திறந்துவிடவும் என்று அல்லாஹ் ஏவியுள்ளான்'' என்பதாகும்.

ஷைஹுல் இஸ்லாம், இப்னு தைமிய்யா (றஹ்) அவர்களும், மற்றும் பேரறிஞர்களும், மேதாவிகளும், இக்கருத்தையே ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்கள். இதுவே சரியான கருத்து. இதில் எந்த ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. முதலில் முகம், கைகளைவிட்டும், பின்னர் உடல் முழுவதையும் மறைக்குமாறும் படிப்படியாகக் கட்டளையிடப்பட்டுள்ளது என்பது இதனால் பெறப்படுகின்றது. முன்னர் கூறப்பட்ட, ''ஏதாவது பொருளை அப்பெண்களிடம் கேட்பதானால் திரைக்குப்பின்னாலிருந்து கேளுங்கள்'' என்ற வேதவாக்கில் எதுவும் நீக்கப்படவில்லை. இந்த ஆயத்து பொது விதியாகும். இதனை அப்படியே கடைபிடிப்பது கட்டாயக் கடமை. இது நபி (ஸல்) அவர்களின் மனைவியருக்கும் மற்றும் முஸ்லிம்களின் ஏனைய பெண்களுக்கும், பொதுவான சட்டம். இது பற்றிய இறைவசனம் 'பிரகாசம்' (நூர்) என்ற அத்தியாயத்திலிருந்து எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதாவது கிழவிகள் விவாகவிருப்பற்றிருத்தல், அலங்கார நோக்கமில்லாதிருத்தல் ஆகிய இரண்டு நிபந்தனைகளுமில்லாத விடத்து ஆடையை அகற்றுவது அவர்களுக்கு ஹறும் என்பதே அவ்வசனத்தின் விளக்கமாகும். இவைபற்றி முன்னர் விபரிக்

கப்பபட்டுள்ளது. பெண்கள் வதன எழிலைக் காட்டுவதும், அலங்கரித்துக் கொண்டு வெளியில் நடமாடுவதும் சுத்த ஹறாம் என்பதற்கு அசைக்கமுடியாத ஆதாரமாக மேற்கூறிய ஆயாத்துக்கள் அமைந்துள்ளன.

இன்றைய நவநாகரிக வனிதையர் அழகை வெளிப்படுத்தி வெளியில் நடமாடித்திரிவது மறைவான இரகசியமல்ல. ஆகவே தீமை பயக்கும் இச்செயலைத் தடுத்து நல்வழிப்படுத்துவதும், பலகெடுதிகளும் பேராபத்துகளும் நிறைந்த பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் அவ்வவமானச் செயலை அடியோடு அகற்றப் பாடுபடுவதும் அவசியமாகும்.

பயங்கர விளைவுகளைத் தோற்றுவிக்கும் காரணங்களுள் மிகமோசமானது, ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தனித்திருப்பதும், விவாகஞ் செய்ய விலக்கப்பட்டவர்கள் துணையின்றிப் பெண்கள் பிற ஆடவருடன் பிரயாணம் செய்வதுமாகும். இதனை நபி (ஸல்) அவர்களின் வாக்கொன்று தெளிவுபடுத்துகிறது. அவர்கள் சொல்வதாவது:- "விவாகஞ் செய்ய விலக்கப்பட்ட ஆண்களுடனல்லாமல் பெண்கள் பிரயாணம் செய்ய வேண்டாம்; தனித்திருக்கவும் வேண்டாம்."

மேலும் நபி (ஸல்) கூறியுள்ளார்கள்:- "கணவனோ அன்றி விவாகஞ் செய்யக் கூடாதவர்களோ தவிர மற்றவர்கள் பெண்களிடத்தில் இராத்தரித்திருக்க வேண்டாம்." (அறிவிப்பவர்: முஸ்லிம்). இன்னும் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், 'ஒரு பெண்

ணுடன் ஓர் ஆண் தனித்திருக்கும் பொழுது மூன்றும் நபராக ஷைத்தான் இருக்கவே செய்வான்'' எனவும் கூறியுள்ளார்கள்.

எனவே முஸ்லிம்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்கள் பெண்கள் பாவச்செயலில் ஈடுபடாது தடுத்து நிறுத்துங்கள். அன்னவர்மீது ஹறுமாக்கப்பட்ட காரியங்களைச் செய்தல், வெளியில் நடமாடல், அழகை வெளிப்படுத்தல், நஸாறுக்களான அல்லாஹ்வின் விரோதிகளுக்கும் மற்றும் அந்நிய மாதருக்கும் ஒப்பாக நடத்தல் ஆதியாம் தீயசெயல்களிலீடுபட விடாது அவர்களைத் தடைசெய்யுங்கள். நீங்கள்அறிந்து கொள்ள வேண்டும்; பெண்கள் விடயத்தில் நாம் மௌனஞ் சாதித்தல் அவர்களுக்கேற்படும் பாவத்தில் எங்களையும் பங்காளியாக்கிவிடும். நாம் அனைவரும் அல்லாஹ்வின் வெஞ்சினத்துக்காளாவதோடு அவனது தண்டனை எம் எல்லோரையும் சூழ்ந்து பற்றிக் கொள்ளும். அல்லாஹ் எங்களையும் உங்களையும் இக்கொடிய தீமையிலிருந்து பாதுகாப்பானாக.

பெண்களோடு ஆண்கள் தனித்திருப்பதும், பெண்கள் தனிமையிலிருக்குஞ் சமயம் அவர்களிடம் செல்வதும், விவாகஞ் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்ட இனபந்துக்களிலில்லாமல் அவர்களுடன் பிரயாணஞ் செய்வதும் வன்மையாகத் தடை செய்யப்பட்ட கடமைகளாகும். இங்ஙனம் செய்வதானது பெரும் பிரச்சினைகளையும், பேராபத்துக்களையும் தோற்றுவிக்கவே செய்யும். இதனை நபி (ஸல்) வாக்கொன்று தெளிவுபடுத்துகிறது. அவர்கள் சொல்வதாவது:- ''ஆண்க

ளுக்குப் பெண்களினுல் ஏற்படக்கூடிய குழப்பத்தை (பித்னுவை) விட மோசமான குழப்பத்தை (பித்னுவை) ஆண்களுக்கு நான் விட்டுவைக்கவில்லை." பிறிதொரு ஹதீஸில், "இந்த உலகம் பசுமையும், இன்பமும் நிறைந்தது. இதில் நீங்கள் எங்ஙனம் செயல்படுகின்றீர்கள் என்பதை அறிய, அல்லாஹ் உங்களைப் பிரதிநிதிகளாக்கியுள்ளான். எனவே, இந்த உலகினைப் பயந்து கொள்ளுங்கள். பெண்களுக்கும் அஞ்சிக் கொள்ளுங்கள். ஏனெனில் பனீஇஸ்ராயீல்களுக்கு ஏற்பட்ட முதலாவது குழப்பம் பெண்களாலேதான் நிகழ்ந்துள்ளது."

மற்ருெரு ஹதீஸில் நபி (ஸல்) கூறுவதாவது:- "இம்மையிலே அழகை வெளிப்படுத்த அரைகுறையாக ஆடையணிந்த எத்தனையோ பெண்கள், மறுமையிலே நிர்வாணிகளாகக் காட்சியளிப்பர்."

வேருெரு ஹதீஸில், "மனிதர்களில் (நரகம் புகும்) இரு பிரிவினர் உண்டு. அவர்களை நான் காணவில்லை. (ஒன்று) தங்கள் கைகளில் சுமந்திருக்கும் மாட்டுவால் போன்ற சாட்டைகளால் மனிதர்களை அடிக்கும் ஆண்கள். (இரண்டாவது) அங்கங்களைத் திறந்துகொண்டு அரை நிர்வாணமாக ஒட்டகத்தின் திமில் அசைவது போன்று நாணமின்றி நெளிந்து, வளைந்து செல்லும் பெண்கள். இவர்கள் சுவர்க்கம் புக மாட்டார்கள்; அதனுடைய வாசனையைக்கூட நுகர மாட்டார்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

இந்த நபிமொழிகள் மெல்லிய, இறுக்கமான, அரைகுறையான ஆடை அணிந்து அநாவசியமாக வெளியில் நடமாடும் வனிதையருக்கு வன்மையான எச்சரிக்கையாகும். அன்றியும் உண்மைக்குப் புறம்பாக நடத்தல், கற்புக்குக் களங்கம் ஏற்படுத்தல், அசத்திய வழியில் மானிடர் நடமாடுதல் ஆதியவற்றிற்கு கண்டிப்பான பயமுறுத்தலாகும். பாபச்செயலைப் பயமின்றிச் செய்யும் மனிதருக்கும், எல்லைமீறி நடப்போருக்கும் வன்மையான அச்சுறுத்தலாகும். இன்னும் சுவனபதியில் நுழைவதைத் தடுக்கும் துர்க்கிரியைகளுக்கு எதிரான சவாலாகும். இத்துர்ப்பாக்கிய நிலைமை எமக்கு ஏற்படாதிருக்க இறைவனை இறைஞ்சுவோமாக!

தீய விளைவுகளில் மிகக் கொடியது, காபிரான பெண்களையும் நஸாருப் பெண்களையும் நமது பெண்கள், நடையுடை பாவனைகளில் பின்பற்றி நடப்பதே யாகும். ஆடைக் குறைப்புச் செய்தல், சாபிரான மாதரைப்போல் கேசத்தைப் பல கோணமாக வகிர்ந்து அழகுபடுத்தி அந்நியர் பார்த்து இரசிக்க இடமளித்தல், செயற்கைக் கூந்தலால் முடியை இணைத்தல் ஆகியவை அவற்றுட் சிலவாகும். ''ஒருவன் எந்தக் கூட்டத்தாருக்கு ஒப்பாக நடக்கிறானோ, அவன் அந்தக் கூட்டத்தானாகவே கருதப்படுவான்'' என நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

அந்நியரைப் பின்பற்றும் இவ் விஷயம் படிப்படியாக வளர்ந்து எந்த நிலைக்கு வந்துவிட்டதென்பது யாவரும் அறிந்ததே! நிர்வாணிகளைப் பின்பற்றும் இந்த ஆடைக் குறைப்பு பல கெடுதிகளையும் பேராபத்துக்களை

யும் மதப்பற்றின்மை, நாணமின்மை முதலியவற்றை யும் பிரதிபலனுகப் பெற்றுத்தந்துள்ளது. ஆகவே இத் தீய செயலை முடியுமானவரை முயன்று, முழுமூச்சாக எச்சரிப்பதும், இப்பேராபத்திலிருந்து நம் பெண்மணி களைத் தடுத்து நிறுத்துவதும் இவ்விடயத்தில் மிகக் கண்டிப்பாக நடந்துகொள்வதும் தலையாய கடமை யாகும். ஏனெனில் இதன் இறுதிப் பலன் மகா மோச மானது. இதன் விளைவு மகா கொடியது.

சிறுமியர் விடயத்திலும் பாராமுகமாயிருப்பது நல்லதல்ல. ஏனெனில் இந்தப் போக்கில் அவர்கள் பயிற்சிபெற்று வளர்வதானது, இதிலே நிரந்தரமாக ஊறிப் பழகிப்போக இடமளித்துவிடும். தவிரவும் பின்பற்றி ஒழுகி நடக்க வேண்டிய கலாச்சாரப் பண்பாட்டை வெறுக்கவும் செய்துவிடும். அவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் மற்றப் பெண்களுக் கேற்பட்ட விஷமமும், குழப்பமும் (''பசாதும், பித் னுவும்'') இழிவும் மற்றும் பயங்கர விளைவுகளும் இவர்களுக்கும் சம்பவித்துவிடும்.

ஆகவே அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல் லாஹ்வை அஞ்சுங்கள்; உங்கள்மீது அல்லாஹ் ஹரு மாக்கியவற்றை விட்டொழியுங்கள்; நன்மை பயக் கும் நற்கிரிகைகளுக்கும், பயபக்தியை நிலை நாட்ட வல்ல காரியங்களுக்கும் பரஸ்பரம் ஒத்தாசைப் புரியுங் கள்; சத்தியத்தை நிலைநாட்டவும், சகிப்புத்தன்மை நிலைபெறவும் பரஸ்பரம் உபதேசஞ் செய்யுங்கள். நீங் கள் அறியவேண்டும்; மறுமையில் இவைபற்றி அல் லாஹ் நிச்சயம் விசாரணை செய்வான். நீங்கள்

செய்த வேலைக்கேற்ப கூலி வழங்கப்படும். பரிசுத்த இறைவன் பொறுமையாளருடனும், பயபக்தியாள ருடனும், உபகாரிகளுடனுமிருக்கிறான். இடுக்கண் களைச் சகித்துக்கொள்ளுங்கள். பரஸ்பரம் சகிப்புத் தன்மையை நிலைநாட்ட உதவுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சி அடிபணிந்தொழுகுங்கள். நல்லுபகாரம் புரி யுங்கள். அல்லாஹ் நல்லுபகாரிகளை நேசிக்கிறான்.

சலக காரியங்களுக்கும் பொறுப்பாயுள்ள தலை வர்கள், நீதிவான்கள். மார்க்க ஞானிகள் (உலமாக் கள்), சங்கங்களின் தலைவர்கள், அவற்றின் உறுப்பி னர்கள் ஆகியோர் அவரவர் பொறுப்பிலுள்ளவர்களைச் சீராக நடத்துவது அவர்கள்மீது நீங்காக் கடமை என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. கண்டும் காணாத வர்களைப்போல் மௌனஞ்சாதிப்பது பெரும் குற்ற மாகும். இதனால் பெரும் அனர்த்தங்கள் விளையும். குறிப்பிட்ட சிலர் மட்டும் தமது வெறுப்பையும் எதிர்ப்பையும் தெரிவித்தால் போதாது. எல்லா முஸ் லிம்கள் மீதும் இது வாஜிபு. விஷேடமாக, செல்வாக் குப்பெற்ற பிரதானிகள், பெரியார்கள்மீது தலையாய கடனாகும்.

குறிப்பாக பெண்களுக்குப் பொறுப்பாயுள்ளவர் கள், அவர்கள் கணவன்மார்கள் எதிர்ப்பும் வெறுப் பும் காட்டுவது தவிர்க்கமுடியாத கடமையாகும். அன் றியும் இவ்விடயத்தில் பாராமுகமாயிருப்பவர்மீது கண்டனம் தெரிவிப்பதும், கடுமையாக வற்புறுத்துவ தும் நீங்காக் கடனாகும். இந்த மோசமான நடத் தையின் காரணத்தால் இறங்கும் சாபக்கேட்டை விட்

டும் அல்லாஹ் எம்மைக் காத்தருள்வானுக! எமக்கு நேர்வழி காட்டி யருள்வானுக; நேரான பாதையில் சீராக நடத்திவைக்குமாறு இறைவனை இறைஞ்சுவோமாக.

நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ் எந்த நபியையும், அவரது உம்மத்துக்களிலிருந்து அவருக்கு உதவியாக உபதேசஞ் செய்பவர்களையும், அவர் ஏவியாங்கு பிறருக்குப்படிப்பினையாக நடந்து காட்டுபவர்களையும் கொடுக்காமல் அனுப்பவில்லை. அவர்களின் பின்னர் சிலர் தோன்றுவர். அவர்கள் செய்யாதனவற்றைப் பிறர் செய்யுமாறு கூறுவர். அவர்களுக்கு ஏவப்படாதவற்றைச் செய்வார்கள். இத்தகையோருடன் தனது கைவலிமையினுல் ஜிஹாது செய்பவனே விசுவாசி. இன்றேல் தனது நாவினுல் ஜிஹாது செய்பவனே விசுவாசி. இன்றேல், தனது உள்ளத்தால் ஜிஹாது செய்பவனே விசுவாசி. இந்த மூன்று படித்தரங்களில் ஒன்றைக் கொண்டு ஜிஹாது செய்யாதவனிடம் அற்பமான சிறிய வித்தளவும் ஈமான் இருக்கமாட்டாது" என்று தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ் ஸுப்ஹானஹூவதஆலா அவனது சன்மார்க்கம் ஸ்திரமடைய ஒத்தாசை புரியுமாறும், அவனது திருக் கலிமாவை உயர்வாக்கிவைக்குமாறும், எங்கள் கருமங்களுக்குப் பொறுப்பாயுள்ளவர்களைச் சீர்திருத்துமாறும், அன்னுர் அனுசரணையுடன் தீய விளைவுகளை அழித்தொழித்து விடுமாறும், சத்திய வழியை நிலைநாட்டி, அசத்திய வழியை நிலைகுலைக்க அன்னுருக்கு ஊக்கமும் உதவியுமளிக்குமாறும்,

எங்களுக்கும் - உங்களுக்கும் ஏனைய முஸ்லிம்களுக்கும், நாடும் நாட்டு மக்களும் சீரும் சிறப்பும் பெற்று மகோன்னத வாழ்வு வாழ நல்லுதவி புரியுமாறும் அல்லாஹ்விடம் இரந்து கேட்கிறேன். நிச்சயமாக அவனே சகல வஸ்துக்கள் மீதும் சக்தி பெற்றவன். இறைஞ்சுவோருக்கு இடுக்கண் துடைக்க அவனே அருகதையுள்ளவன். ஹஸ்புனல்லாஹு வநிஃமல்வகீல் லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹில் அலீயுல் அளீம். வஸல்லல்லாஹு வஸல்லம வபாறக அலா அப்திஹி வறசூலிஹி முஹம்மதின் வஆலிஹீ வஸஹ்பிஹீ வஸல்லம். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.

அப்துல் அஸீஸ் இப்னு அப்தில்லாஹ் இப்னு பாஸ்
உப வேந்தர்,
அல்ஜாமிஅதுல் இஸ்லாமிய்யா,
அல் - மதீனதுல் முனவ்வரு.

★

Jam -e- Ahtu Ansaris Sunnathil Mohammadiya
Paragahadeniya
Ku/ WEUDA
Sri Lanka.
All Ceylon

٣٦

# مسائل الحجاب والسفور

تأليف
الشيخ عبد العزيز بن عبد الله بن باز
الرئيس العام لإدارات البحوث العلمية والإفتاء والدعوة والإرشاد

ترجمه إلى التاملية
المولوي يس. يوسف لبي «الغفوري»

طبع ونشر
الرئاسة العامة
لإدارات البحوث العلمية والإفتاء والدعوة والإرشاد
الرياض ـــ المملكة العربية السعودية

وقف لله تعالى

١٤٠٣هـ - ١٩٨٣م

الرئاسة العامة لإدارات البحوث العلمية والإفتاء والدعوة والإرشاد

٣٦

# مسائل الحجاب والسفور

تأليف

الشيخ عبد العزيز بن عبد الله بن باز

الرئيس العام لإدارات البحوث العلمية والإفتاء والدعوة والإرشاد

ترجمة إلى التاملية

المولوي يس. يوسف لبي «الغفوري»

طبع ونشر
الرئاسة العامة
لإدارات البحوث العلمية والإفتاء والدعوة والإرشاد
الرياض — المملكة العربية السعودية

وقف لله تعالى

١٤٠٣هـ - ١٩٨٣م